இப்படி ஒரு அருமையான பட்ஜெட்டை தாக்கல் செய்த நிதியமைச்சர் அவர்களுக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி, காவல் தெய்வம், முதல்வர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து, வாய்ப்புக்கொடுத்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

5. அறிவிப்பு.

உறுப்பினர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஒரு நினைவூட்டுச் செய்தி. இன்று மாலை 5–00 மணிக்கு உறுப்பினர்களின் பயிற்சிக் கருத்தரங்கு நடைபெறுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நினைவூட்டிக் கொள்கிறேன். கருத்தரங்கிற்கு புதிய உறுப்பினர்கள் மட்டுமல்லாமல் மூத்த உறுப்பினர்களும் வந்து கலந்துகொள்ள வேண்டுமென்று அவர்களையும் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றது. பேரவை மீண்டும் நாளை 10–9–1991 செவ்வாய்க்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-08 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

6. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

31. உள்துறையின் 15–10–1973ஆம் நாளிட்ட II-1/5208/1973ஆம் எண் அறிவிக்கையை ரத்து செய்வது குறித்து உள்துறையின் 7-11–1990ஆம் நாளிட்ட 2426ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்பு சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

32. காவல் துறையினரை புறநகர்ப் பகுதிகளுக்கு ஏற்றிச் செல்லும் பொருட்டு வாடகைக்கு அமர்த்தப்பட்ட பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் சில பேருந்துகளுக்கு வரி செலுத்துவதிலிருந்து விலக்களித்தல் குறித்து உள் (போக்குவரத்து-அ) துறையின் 7–11–1990ஆம் நாளிட்ட 2427ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

33. 29-12-1980 முதல் 30-9-1986 வரை "நெல்லூர்-சென்னை" தடத்தின் உரிமம் இல்லாமல் நடத்தப்பட்ட ஆந்திர மாநில போக்குவரத்துக் கழகத்தின் மோட்டார் வண்டிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய தண்ட வரியினைத் தள்ளுபடி செய்வது குறித்து உள் (போக்குவரத்து-அ) துறையின் 15-11-1990ஆம் நாளிட்ட 2494ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்பு சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின்கீழ் பேரவை முன்வைக்கப் பெற்றது.]

34. காரைக்குடி, திருவாளர்கள் சென்ட்ரல் எலக்ட்ரோ கெமிக்கல் ரிசர்ச் இன்ஸ்டிடியூட்டிற்குச் சொந்தமான அமிலம் ஏற்றிச் செல்லும் வண்டி எண்.டி.என்ஆர். 137-க்கு அளித்து வந்த வரிச் சலுகையினை ரத்து செய்வது குறித்து உள் (போக்குவரத்து-அ) துறையின் 30-11-1990 ஆம் நாளிட்ட 2590 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்பு சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின்கீழ் பரவைமுன் வைக்கப்பெற்றது].

35. தமிழ்நாடு 1981ஆம் ஆண்டு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு சாராவிகள் (உற்பத்தி) விதிகளில் திருத்தமொன்று செய்தது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 22-1-1991ஆம் நாளிட்ட 36ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

36. திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் 1989-90ஆம் ஆண்டிற்கான பதினோராவது ஆண்டறிக்கை. [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

37. நேசமணி போக்குவரத்துக் கழகத்தின் 1989-90ஆம் ஆண்டிற்கான ஏழாவது ஆண்டறிக்கை. [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956] 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

38. பல்லவன் போக்குவரத்துக் கழக அறிவுரைப் பணிக் குழுமத்தின் 1989-90ஆம் ஆண்டிற்கான ஆறாவது ஆண்டறிக்கை. [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).